**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.71/2022**
**வழக்கு சாட்சி – அ.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தனபால் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2023

**( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் விருதுநகரில் குடியிருந்து வருகிறேன். நான் வருங்கால வைப்பு நிதி அலுவலகம் மதுரை மண்டலத்தில் உதவி ஆணையராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2006 முதல் 2008 ஆம் ஆண்டு வரை மதுரை மண்டல வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் ஆய்வாளராக பணியல் இருந்தபோது எனது மூத்த அதிகாரி அசா.1 ன் ஆணைப்படி, சீப்பாலக்கோட்டை பஞ்சாயத்து ஒன்றிய அலுவலகத்திற்கு எங்களது அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வில்லங்க சான்றிதழ்களின் உண்மை தன்மை குறித்து கண்டறிய சென்றேன். அந்த அலுவலகத்தில் பாரதி என்பவர் தலைவராக இருந்தார். என்னிடம் இருந்த ஆவணத்தில் மேற்படி பாரதி என்பவரிடம் தங்களது அலுவலகத்தில் இருந்து கொடுக்கப்பட்டதா என்று கேட்டபோது அவர் எங்களது அலுவலகத்தில் இருந்த இந்த ஆவணம் கொடுக்கப்படவில்லை என்று கூறினார். பாரதி என்பவருக்கு முன்னதாக சீப்பாலக்கோட்டை பஞ்சாயத்து ஒன்றியத்தில் தலைவராக துரை (எ) சின்ன லட்சுமணய்யா என்பவர் இருந்தார். அவரிடம் சென்று ஆவணத்தைக் காண்பித்து அதன் உண்மைத்தன்மை குறித்து கேட்டபோது, அவரும் அந்த ஆவணத்தை நான் வழங்கவில்லை என்று கூறினார். அது சம்மந்தமாக எங்களது அலுவலகத்திற்கு தெரியப்படுத்தினேன். அதன்பின்னர் எஸ்.பி.நத்தம் பஞ்சாயத்து ஒன்றிய அலுவலகம் சென்றுபோது அவர் தலைவர் அலுவலகத்தில் இல்லை. அவர் இருந்த இடம் சென்று விசாரித்தபோது அவரிடம் ஆவணம் குறித்து கேட்டபோது மேற்படி ஆவணம் நான் கொடுக்கவில்லை என்று கூறினார். அதன்பின்னர் கல்லிக்குடி சார்பதிவாளர் அலுவலகம் சென்று விசாரித்தபோது சார்பதிவாளர் சிவராமன் என்பவர் நான் காண்பித்த ஆவணங்கள் எதுவும் அவரது அலுவலகத்தில் கொடுக்கபடவில்லை என்று கூறினார். மேற்படி விசாரணைகள் குறித்த எனது அறிக்கையை எனது மேல் அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் அசா.ஆ.2 Annexure B ஆவணம் நான் கொடுத்ததுதான். என்னிடம் காண்பிக்கப்படும் அசா.ஆ.3 Annexure C ஆவணம் நான் கொடுத்ததுதான். என்னிடம் காண்பிக்கப்படும் அசா.ஆ.4 Annexure D ஆவணம் நான் கொடுத்ததுதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 ன் உத்தரவின் பேரில் நான் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட கடன் சம்மந்தமாக விசாரணை மேற்கொண்டேன் என்றால் சரிதான். விசாரணைக்காக என்னிடம் என்ன

ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்றால் layout copy கொடுக்கப்பட்டது. கடன் விண்ணப்பங்கள் அனைத்திலும் உறுதிமொழி படிவம் பூர்த்தி செய்யப்படாமல் கொடுக்கப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது. அதை நான் கவனிக்கவில்லை. ஆவணம் அசா.ஆ.3 Annexure C ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள சீப்பாலக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் வழங்கிய தடையில்லா சான்று ஆவணம் நகல் என்றாலும் அது நகல் எடுத்தபின்பு சம்மந்தப்பட்ட அதிகாரிகளால் கையொப்பம் இடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அசா.ஆ.3 Annexure C ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள layout plan நகல் என்றாலும் நகல் எடுக்கப்பட்ட பின்பு சம்மந்தப்பட்ட அதிகாரியால கையொப்பம் செய்யப்பட்டு சீல் இடப்பட்டள்ளது என்றால் சரிதான். என்னிடம் விசாரணைக்காக மேற்படி ஆவணங்கள் கொடுக்கப்படும்போது இதேபோல் தான் கொடுக்கப்பட்டது. நான் எதிரி சென்றாயனை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான், அது தேவையில்லை. அதேபோல் முன்பணம் பெற்ற பயனாளிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு பயனாளிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட layout plan பொய்யான ஆவணம் என்பதுதான் வழக்கு என்றால் சரிதான். layout plan எதிரியால் கொடுக்கப்பட்டதா, பயனாளிகள் கொடுத்தார்களா என்றால் நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் கிரய உடன்படிக்கையை வாங்கிப் பார்க்கவில்லை. சர்வே எண் 216/4 ல் கண்ட நிலம் எதிரி சென்றாயனுக்குப் பாத்தியப்பட்டதா என்பது குறித்து நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். கிரய உடன்படிக்கையோ, கிரய ஆவணமோ கொடுக்கும்போது பிளாட் பிரிக்கப்பட்டிருந்தால் அதில் பிளாட் எண் காட்டப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வில்லங்க சான்றிதழில் பிளாட் எண் காட்டப்படவில்லை என்றால், சரிதான். கடன் வழங்கிய சமயத்தில் வருங்கால வைப்பு நிதி கடன் பெற வரைபடமோ, வரைபட அனுமதியோ பெறப்பட வேண்டிய கட்டாயம் இல்லை என்றால் சரிதான். வரைபடமோ, வரைபட அனுமதியோ பெறப்படவேண்டிய கட்டாயம் இல்லை என்ற நிலையில் layout plan கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். கடன் விண்ணப்பம் கொடுத்த பயனாளிகள் வருங்கால வைப்பு நிதியத்தின் உறுப்பினர் என்றால் சரிதான். கடன் விண்ணப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கு நிதி சென்றடைந்துவிட்டது என்றால் அதுகுறித்து நான் விசாரிக்கவில்லை. சீப்பாலக்கோட்டை கிராம ஊராட்சி மன்ற தலைவரிடம் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை. இந்த புகார் சம்மந்தமாக யாரையெல்லாம் விசாரிக்கவேண்டுமோ, என்ன ஆவணங்களை பரிசீலிக்க வேண்டுமோ, அது தவிர்த்து அவர்களை எல்லாம் விசாரிக்காமல் தவிர்த்து சம்மந்தம் இல்லாத நபர்களிடம் விசாரணை மேற்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றாலும், எனது உயர் அதிகாரி அசா.1 கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரய உடன்படிக்கைகள் எதிலும், எதிரி சென்றாயன் கையெழுத்தோ, கைரேகையோ செய்யவில்லை என்றால், அது எனது விசாரணைக்கு வராது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் அது சரியல்ல.